# வன்னி புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சு

கொள்கைத் திட்டவரம்பு, நிகழ்ச்சித்திட்டம்,
வேலைத்திட்டம் - 2003
வளர்ச்சி - 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கைத்திட்ட வரம்பு, நிகழ்ச்சித்திட்டம், வேலைத்திட்டம் - 2003

## வளர்ச்சி - 2002

S. AMIRTHALINGAM
SECRETARY TO THE GOVERNOR
GOVERNOR'S SECRETARIAT (NEP)
TRINCOMALEE

146, காலி வீதி, கொழும்பு - 3

தொலைபேசி 333714/342990/384112

தொலைநகல் 074 - 723122

மின் அஞ்சல் : vannimin@sltnet.lk
navanni@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பின்னணி | 4 |
| 1.1 | தொலைநோக்குக் கூற்று | |
| 1.2 | செயற்பணிக் கூற்று | |
| 1.3 | பிரதான பணிகள் | |
| 1.4 | அமைச்சின் ஆற்றலளவு, நிறுவனத் திறன் விருத்தி | |
| 2. | கொள்கைத் திட்ட வரம்பு | 6 |
| 2.1 | ஈன்று "R" திட்ட வரம்பு | |
| 2.2 | அமைச்சின் பங்களிப்பு | |
| 2.3 | கொள்கை வகுத்தமைத்தலும், செயல் முறைத் திட்டமிடலும் | |
| 3. | அமைச்சினது பிரதான நிகழ்ச்சித்திட்ட வகையாறுகள் | 9 |
| 4. | செயற்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட கருத்திட்டங்கள் | 10 |
| 4.1 | இலக்கும் முன்னுரிமைகளும் - 2003 | |
| 4.2 | கருத்திட்ட நிதியிடல் | |
| 4.3 | கருத்திட்ட விவரணம் | |
| 4.4 | உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் தேசிய அளவீடு | |
| 4.5 | செயற்படுத்தும் முகவராண்மைகளின் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் | |
| 4.6 | செயற்படுத்தல் முறைமையியல் | |
| 4.7 | வறுமைத் தணிப்பு செயல் உபாயங்களுடன் ஒருங்கிணைத்தல் | |
| 5. | மீள் குடியேற்றத்திற்கான செயல் உபாயம் | 20 |
| 5.1 | வறுமைத் தணிப்பு செயல் உபாயம் | |
| 5.2 | உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களிடையில் சமுதாய வலுவூட்டல் | |
| 5.3 | ஒருங்கிணைந்த மீள் குடியேற்றக் கிராமங்கள் | |
| 5.4 | துறைசார் செயல் உபாயம் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

6. மீள் குடியேற்றத்திற்கான பிரதான தீர்வுக்குரிய விடயங்கள் 24

7. வளர்ச்சி மீளாய்வு - 2002 27
7.1 100 நாள் நிகழ்ச்சித்திட்டம்
7.2 மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம்
7.3 மீள் குடியேற்றத்திற்கான ஆயத்தம்
7.4 மீள் குடியேற்றத்திற்கான அடிப்படை வசதிகள்
7.5 உட்கட்டமைப்பு அபிவிருத்தி

8. நிதி அறிக்கை - 2002 37

9. பிற தகவல்கள் 39

இணைப்புக்கள்:

1.
அட்டவணை அ 40
- 2002 09.30 ஆம் திகதியில் உள்ளவாறு வன்னிப் பிராந்தியத்தின் சனத்தொகை

அட்டவணை ஆ 41
- 2002.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு நலன்புரி நிலையங்களிலும், மீள் குடியேற்றப்பட்ட கிராமங்களிலும், நண்பர்களுடனும் உறவினர்களுடனும் வாழும் உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள்

அட்டவணை இ 43
- 2003.01.01 ஆம் திகதியில் உள்ளவாறு மீள் குடியேற்றத்துக்கென உள்ளவர்களின் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | பக்கம் |
|---|---|---|---|
| அட்டவணை ஈ | | | 45 |
| | - | 2002 ஜூலையில் உள்ளவாறு உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் சுருக்க விபரம் | |
| 2. | (அ) | மாவட்ட முகக்குறிப்பு - மன்னார் | 46 |
| | (ஆ) | மாவட்ட முகக்குறிப்பு- முல்லைத்தீவு | 47 |
| | (இ) | மாவட்ட முகக்குறிப்பு - வவுனியா | 48 |
| 3. | (அ) | மன்னார் மாவட்ட வரைபடம் | 49 |
| | (ஆ) | முல்லைத்தீவு மாவட்ட வரைபடம் | 50 |
| | (இ) | வவுனியா மாவட்ட வரைபடம் | 51 |
| 4. | | வேலைத்திட்டம் - 2003, செயலாற்றுகை - 2002 விவரணங்கள் | |
| | (அ) | வன்னிக்கான விசேட புனர்வாழ் வளிப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2003 | 52 |
| | (ஆ) | 2002 இன் மாவட்டம் சார் செயலாற்றுகை, வேலைத்திட்டம் - 2003 | 53 |
| | (இ) | 2002 இன் துறைசார் செயலாற்றுகை, வேலைத்திட்டம் - 2003 | 54 |
| | (ஈ) | வன்னிக்கான விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2002 (பெறுகை – செயற்படுத்தும் முகவர்கள் - பங்கேற்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள்) | 55 |
| | (உ) | மீள் குடியேற்றத்துக்காக அடையாளங் காணப்பட்டுள்ள பிரதான தீர்வுக்குரிய விடயங்கள் | 58 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சு

1. பின்னணி

வன்னிப் புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சானது, இன முரண்பாட்டின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களது வாழ்க்கையினையும், வாழ்க்கைத் தேவைகளையும் நிலை நிறுத்துவதற்கு மீள் குடியேற்றத்தினைக் குறிப்பாக நோக்கில் கொண்டு உதவி, புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பில் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சானது புதிதாக உருவாக்கப்பட்டதொன்றாக இருந்த போதிலும், 2002 ஆம் ஆண்டில், அரசாங்கத்தினது முழுமையான கொள்கைத் திட்ட வரம்பிற்குள் அமைச்சினது நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தியது. 2002 ஆம் ஆண்டு ஒரு ஆதார ஆண்டாக இருக்கிறது.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகியவற்றை வன்னிப் பிராந்தியம் அடக்குகின்றது. நிரந்தரமானதும், உள் நாட்டில் இடம் பெயர்ந்ததுமான வதிவிட சனத்தொகையின் மொத்தம் 400,000 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பிராந்தியத்திற்கு வெளியே இங்கும் வெளிநாடுகளிலும் வாழும் மக்களையும் எடுத்துக் கொண்டால், சனத்தொகையின் எண்ணிக்கை சுமார் 540,000 ஆக விளங்கும். இது இலங்கையில் வாழும் சுமார் 80,000 பேர்களையும், வெளிநாடுகளில் வாழும் இன்னொரு 60,000 பேர்களையும் உள்ளடக்கும்.

வெளிநாடுகளில் வாழ்பவர்களில், மன்னாரைச் சேர்ந்த அண்ணளவாக, 30,000 மக்கள் தற்போது இந்தியாவில் வாழ்கிறார்கள். சமாதான முயற்சியைத் தொடர்ந்து, பிராந்தியத்திற்குத் திரும்புவதற்கான தமது சம்மதத்தை அவர்களில் சிலர் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

நாட்டில் உள்ள மிகவும் அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகளில் ஒன்றாகவும், இராணுவ நடவடிக்கையின் அரங்கமாகவும் வன்னி விளங்குகின்றது. அத்தோடு, நாட்டில் உள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஆட்களின் பாரிய தொகையிலானோருக்கு அது விருந்தோம்புகின்றது.

வன்னி புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சிற்கு குறித்தொதுக்கப்பட்ட பணிகள், பிரதானமாக மக்களின் வாழ்க்கையினை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்தனைச் சுற்றியே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

011.1 எமது தொலை நோக்கு

வன்னியிலும், வன்னியினதும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களினதும், வன்னியின் நிரந்தர சனத்தொகையினதும் கௌரவத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருதல்.

1.2 எமது செயற்பணி

வன்னியின் பொருளாதார, சமூக, கல்வி, கலாசார மற்றும் சுகாதாரப் பராமரிப்பு அம்சங்களில் நவீன சுய நிலைத்திருத்தல் சமூகமொன்றை உருவாக்குவதுடன், பௌதீக, சமூக, கலாசார மற்றும் மனிதவள உள்ளகமைப்பை வழங்கி, அதன் புனரமைப்பு மீது வலியுறுத்தலை வைத்து, ஒழுங்குபடுத்தல் திட்டமொன்றைத் தயாரித்து, அமுலாக்குதல்.

1.3 பிரதான பணிகள்

2002.02.28ஆம் திகதிய விசேட வர்த்தமானியில் தோன்றிய அறிவித்தலுக்கிணங்க அமைச்சினது பிரதான பணிகள் பின்வருமாறு இருக்கும்;

- வன்னி புனர்வாழ்வளிப்பு தொடர்பில் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், அகதிகள் விவகார அமைச்சருக்கு உதவுதல்.

- இடம் பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும், செயற்படுத்தலும்.

- மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிக்கும் வகையில் சேதமடைந்த உட்கட்டமைப்புக்களது புனர்வாழ்வளிப்பு, புனரமைப்பு தொடர்பில் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.

- சிதைவுற்ற பொருளாதார, வர்த்தக மற்றும் சமூக செயற்பாடுகளை மீளத்தொடங்கல்.

- பாதிக்கப்பட்ட பொது வசதிகள், குடியியல் வசதிகள், சமூக – பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் பொதுக் கட்டடங்களது புனரமைப்பினை ஆரம்பித்தலும் செயற்படுத்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ இயல்பான மக்கள் வாழ்வினை மீள்நிலைப்படுத்தலில் உரிய அரசதுறை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவுதல்.

1.4 அமைச்சின் ஆற்றலளவு / நிறுவனத்திறன் விருத்தி :

2002ஆம் ஆண்டில் அமைச்சினது நிகழ்ச்சித்திட்டங்களை திறம்படச் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி, மனித வளம், பிற வளங்களைப் பெறுவதற்கு நிதி அமைச்சு, கொள்கை அபிவிருத்தி மற்றும் செயற்படுத்தல் அமைச்சு, நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள் இணக்கம் என்பவற்றினைக் கூட்டிணைக்கும் ஆணையாளர் - அதிபதியின் அலுவலகம் ஆகியவற்றுடன் இசைந்தவாறு முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு மேலாக, அமைச்சானது கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக வள அணியினரின் சேவைகளை வேளைக்கேற்ற அடிப்படையில் பெற்றிருக்கிறது. இந்த அமைச்சுடன் அமைச்சினது குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் வன்னிப்பிராந்தியத்தில் உள்ள அரசாங்க அதிபர்கள் அவர்களுக்கிருக்கும் வரையறைகளுக்கு உட்பட்ட வகையில் ஒத்துழைத்திருக்கிறார்கள்.

இந்த அமைச்சானது முற்றாக புதிய விடயத்துடன் புதிதாக உருவாக்கப்பட்டதொன்றாக இருப்பதால், 2002ஆம் ஆண்டில், அமைச்சினை ஒழுங்குபடுத்துவதற்காக எல்லா விடயதானங்களையும் மனித வளங்களையும் ஒன்றாக இணைப்பதில் கணிசமான நேரத்தினை செலவிட வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் புதிய வழிகாட்டல்கள், நிருவாக மறு சீரமைப்பு முன்னுரிமைகளுக்கு இணங்க, அமைச்சினது கடமைப் பொறுப்புக்களைத் திறம்பட நிறைவேற்றுதவதற்காக இந்த அமைச்சினது நிறுவனம்சார் ஆற்றலளவினை வலுவூட்டுவதற்கு தொடர்ச்சியான மதிப்பீடும் கண்காணிப்பும் செய்யப்பட்டிருக்கிறது.

2. கொள்கைத்திட்ட வரம்பு

2.1 மூன்று "R" திட்ட வரம்பு

நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள் இணக்கத்துக்கான தேசிய கூட்டிணைப்புக்குழு ஒன்றினை அரசாங்கம் தாபித்திருக்கிறது. தேசிய குழுவானது, உரிய வரிசை அமைச்சுக்கள், பாதிக்கப்பட்ட மாகாணங்களது பிரதான செயலாளர்கள், ஐக்கிய நாட்டு முகவர்கள், பலகட்சி, இரு கட்சி நன்கொடை அளிப்பவர்கள், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் மனிதாபிமான உதவிகளைச் செய்கின்ற அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. வன்னி புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சானது இந்த தேசிய குழுவின் ஒரு பிரதான உறுப்பினராக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-3-நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள் இணக்கத்துக்கான தேசிய கூட்டிணைப்புக் குழுவானது, இரண்டு தசாப்தங்கள் பழமையான ஆயுத முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் உள்ளிட்ட எல்லா மக்களது வாழ்க்கையினை மீளக் கட்டியெழுப்புதற்கு, மூன்று "R" நிகழ்ச்சித்திட்டத்தின் கொள்கை வழிகாட்டல்களை வகுத்தமைக்கும் மேல் மட்ட யாக்க அமைப்பாக இருக்கிறது. அதற்கிணங்க, வன்னி புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சானது நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள் இணக்கத்துக்கான தேசிய கூட்டிணைப்புக்குழுவினது கொள்கை, வழிகாட்டல்கைளப் பின்பற்றி, வன்னிப் பிராந்தியத்தில் உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களது மீள் குடியேற்றத்தினைக் குறிப்பாக நோக்கி, அதனது நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் வகுத்தமைக்கிறது.

எனவே, அமைச்சானது,

- தன்னிச்சையான அடிப்படையில் மீள் குடியேற்றத்தையும், மீள் இடமாற்றுவதையும் துரிதப்படுத்தும்.
- தேவைகளை இனங்காண்பதிலும், முன்னுரிமைப் படுத்துவதிலும் மக்களைச் சம்பந்தப்படுத்தும்.
- வறுமைத் தணிப்பு செயலுபாயங்களுடன் இடம் பெயர்ந்த ஆட்களின் மீள் குடியேற்றத்தையும், மீள் இடமாற்றத்தையும் ஒன்றிணைக்கும்.
- அபிவிருத்தி முயற்சிகளுக்குள் சகல மீள்குடியேற்ற புனரமைப்புச் செயற்பாடுகளை ஒன்றிணைக்கும்.
- புனரமைப்பு, மற்றும் அபிவிருத்தி ஆகிய நடைமுறையின் பரவலாக்கக் கோட்பாடுகளை ஒழுகி நடக்கும்.
- தேர்ச்சியை முன்னேற்றுவதற்கும், வருமானத்தைத் தோற்றுவிப்பதற்கும் சந்தர்ப் பங்களை வழங்குவதன் ஈலம் மக்களை இயலச் செய்வதுடன், அவர்களுக்கு வலுவூட்டலை அளிக்கும்.
- அரச சார்பற்ற நிறுவனங்களதும், சமுதாயத்தினதும், தனியார் துறையினதும் பங்கெடுப்பை ஊக்கப்படுத்தும்.
- மூன்று "R" நிகழ்ச்சித்திட்டத்தினைக் கூட்டிணைப்புச் செய்வதற்காக, நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள் இணக்கத்துக்கான தேசிய கூட்டிணைப்புக் குழுவினால் வழங்கப்பட்ட கொள்கைக் குறிக்கோள்களையும், வழிகாட்டல்களையும் எய்தப் பெறுதலுக்கு பங்களிப்புச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 அமைச்சினது பங்களிப்பு

2.2.1 திட்டமிடல் பங்களிப்பு : நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், மீள் புனர் நிர்மானம் மற்றும் மீள் இணக்கம் ஆகியவற்றை அடக்கும் பல்முனைப்பிலான அணுகுமுறை ஊடாக புனர்வாழ்வளிப்பினை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அமைச்சு தயாரிக்கும்.

2.2.2 செயற்படுத்தற் பங்களிப்பு : அரசாங்க முகவர்கள், ஆட்கள் ஆதனங்கள் கைத்தொழில்கள் புனர்வாழ்வளிப்பு அதிகார சபை (ஆ.ஆ.கை.பு.அ), அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் வன்னி மக்களின் புனர்வாழ்வளிப்புத் தொடர்பிலான அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு அமைச்சு உதவும்.

2.2.3 எளிதாக்கும் பங்களிப்பு : வன்னி மக்களின் நன்மைக்காக சமுதாய அடிப்படையிலான தாபனங்கள், அரச சார்பற்ற தாபனங்கள், மற்றும் ஏனைய இவற்றையொத்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் செயற்படுத்தலில் எளிதாக்கும் பணியினை அமைச்சு வகிக்கும்.

2.2.4 ஊக்குவிக்கும் பங்களிப்பு : ஈன்று "R" கொள்கைத் திட்ட வரம்பில் உச்சரிக்கப்பட்டவாறு புனர்வாழ்வளிப்புத் தொடர்பிலான விடயங்கள் மீது செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு பிற அமைச்சுக்களுடன் அமைச்சானது கூட்டிணைப்புச் செய்யும்.

2.2.5 ஆலோசனைப் பங்களிப்பு : அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ஆலோசனைப் பங்களிப்பில் பிற முகவர்களுடன் அமைச்சானது ஒரு முகப்படுத்தும்.

2.3 கொள்கை வகுத்தமைத்தலும், செயல் உபாயங்களைத் திட்டமிடலும்

2.3.1 அமைச்சினது கொள்கைத்திட்ட வரம்பின் அடிப்படைக் குறிப்பானது நிவாரணம், புனர்வாழ்வளிப்பு, மீள் இணக்கத்துக்கான தேசிய கூட்டிணைப்பு ஆணையாளர் அதிபதியின் அலுவலகத்துடனும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின். உத்தியோகத்தர்களுடனும் கலந்தாலோசனை செய்தவாறு தயாரிக்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலத்திலான செயல் உபாயத் திட்டத்தை விருத்தி செய்யும் நோக்குடன், உசாவுகை, உதவிச் செயற்திட்டமொன்றை அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளதுடன், செயல் உபாயத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு முன்பதாக கரிசனையுள்ள சகல ஆதாய உடைமையாளர்களுடனும் கலந்தாலோசனை செய்யப்படும்.

தாமதங்களை ஈடுசெய்வதற்காக, அமைச்சானது செயல் உபாயத் திட்டத்தினை வகுக்கும் வேளையில், அதே நேரத்தில், நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் உடன் நிகழ்கின்ற செயற்படுத்தல் செயல் உபாயம் ஒன்றினையும் பின்பற்றுகிறது.

2.3.2 தேவை மதிப்பீட்டு செயல் அமர்வு : அமைச்சினது நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை அடையாளங்காண்பதற்கும் முதன்மைப் படுத்தலுக்குமாக, அமைச்சானது மன்னார், வுவனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்காக அடிமட்ட பங்குபற்றுதலுடன் தொடர்ச்சியான செயல் அமர்வுகளை ஒழுங்குபடுத்தியது. அமைச்சானது வன்னிப் பிராந்தியத்தில் புனர்வாழ்வளிப்புத் திட்டமிடலுக்கான உடனடித் தேவையினை மாவட்ட, பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களது பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவுத்துறை பிரதிநிதிகளின் உதவியுடன் இனங்காண்பதற்கு இயலுமாக இருந்தது. அமைச்சானது, குறுகிய கால செயற்படுத்தலுக்கு அவசியமான ஆவணங்களை ஏற்கனவே திரட்டியிருக்கிறது.

3. அமைச்சின் கீழான பிரதான நிகழ்ச்சித்திட்ட வகையாறுகள் :

3.1 மனித வள அபிவிருத்தி : ஆதாய உடமையளர்கள், மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்பியலை உயர்த்துதல், வன்னியில் இலக்குச் சனத்தொகையை சமூக ரீதியாகத் திரட்டுதல், பங்கெடுக்கும் அமுலாக்கும் முகவராண்மைகளின் தேர்ச்சிகளையும், ஆற்றலளவையும் முன்னேற்றுதல்.

3.2 மனித மீள் குடியேற்றம், உறைவிடத்தை விருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் கிராம மீள் எழுச்சி

3.3 கமத்தொழில், மீன்பிடி, கால்நடை அபிவிருத்தி, தொழின்முயற்சி அபிவிருத்தி ஆகிய துறைகளில் பொருளாதாரச் செயற்பாடுகளை மேம்படுத்தல்.

3.4 தகவல் அபிவிருத்தி, தகவல், தகவற்தொடர்பு தொழில் நுட்பத்தை மேம்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5 குடிசார் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சனசமூகங்கள், நிறுவனங்கள், சமய வழிபாட்டிடங்கள், தாபனங்கள், தொழிற்துறைகள் ஆகியவற்றைப் புனரமைத்தல்

3.6 கமக்காரர்கள், மீனவர்கள், சிறிய, நுண்-தொழிற்துறை உரிமையாளர்கள் ஆகியோருக்கான நுண்கடன் திட்டங்கள்

3.7 தொழிலையும், வருமானத் தோற்றுவிப்பையும் மேம்படுத்தும் திட்டங்கள்

3.8 முறைமையான, முறைசாராத கல்வி, சுய-அபிவிருத்தி, சுகாதாரப் பராமரிப்பு, மன உளைச்சல் கலந்தாய்வு ஆகிய துறைகளில் வலது குறைந்தோர், அனாதைகள், இளைஞர், சிறுவர்கள், பெண்கள், வயதானோர் ஆகியோருக்கான விசேட திட்டங்கள்

3.9 தேசிய ஒருமைப்பாட்டையும், மீள் இணக்கத்தையும் மேம்படுத்துவதற்காக கலாசார, விளையாட்டுச் செயற்பாடுகளின் திட்டம்

3.10 தேசிய ஒருமைப்பாட்டையும், மீள் இணக்கத்தையும் மேம்படுத்துவதற்காக கலாசார, விளையாட்டுச் செயற்பாடுகளின் திட்டம்

3.11 மத்திய, மாகாண, உள்ளூராட்சி சபைகள் முகவராண்மைகள் ஆகியவற்றினால் வழங்கப்படும் சேவைகளை சமமான முறையில் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சுற்றயல்களில் வாழும் மக்களை அடைவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

4. செயற்படுத்தலுக்காக இனங்காணப்பட்ட கருத்திட்டங்கள்

4.1 இலக்கு, முன்னுரிமைகள் - 2003

4.1.1 வன்னியில் இலக்குக்குழு :

பாதிக்கப்பட்ட பகுதிகளின் அரசாங்க அதிபர்களது மதிப்பீடுகளுக்கு இணங்க, அடுத்த இரண்டு வருடங்களில் 237,000 ஆட்களை உள்ளடக்கிய 55,000 குடும்பங்களுக்கு மேற்பட்டவர்கள் மீள் குடியேற்றத்துக்காக காத்திருக்கிறார்கள். இது, இந்தியா போன்ற பிற நாடுகளில் வாழுகின்ற 14,000 அகதிக் குடும்பங்களையும் உள்ளடக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த போதிலும், அரசாங்கமானது உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதை முன்னுரிமைப்படுத்தியிருக்கிறது. அதனால் அமைச்சானது 2003 ஆண்டில் மீள் குடியேற்றத்திற்காக விசேட பிரிவினரான 4,500 குடும்பங்களை எடுக்கும். இது மொத்த கிராம அபிவிருத்தி அணுகுதலையும் தற்போதிருக்கின்ற கிராமங்களில் மீள் குடியேற்றம் இரண்டினையும் உள்ளடக்கும்.

மீள் அமைக்கப்பட்ட இடங்களில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்தலும் கைவிடப்பட்ட கிராமங்களை மீள நிர்மாணித்தலும் மொத்த கிராம அணுகுதலின் கீழ் வருகிறது. இது ஈன்று மாவட்டங்களில் 50 கிராமங்களில் 3,500 குடும்பங்களுக்கு இசைவாய் இருக்கும்.

அவை பின்வருமாறு :

1) மன்னார் - 1,500 குடும்பங்கள் - 30 கிராமங்களில்
2) வவுனியா - 500 குடும்பங்கள் - 05 கிராமங்கள்
3) முல்லைத்தீவு - 1,500 குடும்பங்கள் - 15 கிராமங்கள்

இதற்கு மேலாக, மூன்று மாவட்டங்களில் உள்ள தற்போதைய கிராமங்களில் 1000 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டு ஒருங்கிணைப்புச் செய்யப்படும். 2003 ஜனவரியில் இருந்து, வெளிநாட்டு உதவி பெறுவதில் சுயமாகத் திரும்புபவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதனால், அமைச்சானது, பிற குடும்பங்களினது பிரிவினரில் விசேடமாக நலன்பரி நிலையங்களிலுள்ளவர்களிலும் நிலம் கிடைக்கக்கூடிய தன்மையுடன் தொடர்புடைய பிரச்சினை உள்ளவர்களிலும் கவனம் செலுத்தும்

4.1.2 புத்தளத்திலுள்ள வன்னியினது இலக்குக்குழு

அமைச்சானது 85 மீள் குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களிலுள்ள 7,000 குடும்பங்களுக்கு சேவை வசதிகளையும், வருமானத்தை உண்டு பண்ணும் நடவடிக்கைகளை வழங்குவதற்கும் திட்டமிடுகிறது.

4.1.3 சமாதான நடவடிக்கையினதும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினதும் சார்பு நிலை

அமைச்சானது, ஒஸ்லோ விளைவுகளுக்குச் சாதகமான முறையில் பதில் அளிக்கும் வண்ணம் மீள் குடியேற்ற, புனர் நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தலை முன்னுரிமைப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சானது, அரச சார்பற்ற நிறுவனங்களால் தொடப்படாத பகுதிகளை ஏற்கனவே அடையாளங்கண்டிருப்பதுடன், இந்த வெற்றிடத்தினை மீள் குடியேற்றக்காரர்களுக்கு நன்மை தரும் கருத்திட்டங்களினாலும், வேகத்தினைப் பேணுவதினாலும் நிரப்புவதற்கு இருக்கிறது.

*தன்னிச்சையான மீள் குடியேற்றத்தினை மேம்படுத்தல் என்பது பின்வருவனவற்றினை உள்ளடக்கும் :*

(அ) மீள் குடியேற்றத்திற்காக அவர்களது சொந்தக் கிராமங்களுக்குச் சுயமாகத் திரும்புகின்ற உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்கல்.

(ஆ) வன்னியில் வாழுகின்ற இடமற்ற உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு அரச நிலக் கொள்கைக்கு இணங்க மாற்று இடங்களை வழங்குவதுடன், அவர்களுக்கு அடிப்படை வசதிகளும் வழங்கப்படும்.

(இ) வன்னியிலும், தீவின் பிற பாகங்களிலும் வாழுகின்ற உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கும் அவர்களது சுயமான மீள் குடியேற்றத்திற்கு முன்னுரிமை கொடுப்பதோடு, அவர்களுக்கு அடிப்படை வசதிகளையும் வழங்குதல்.

4.1.4 தேர்ச்சி அபிவிருத்தியும் வேலை உருவாக்கலும் :

உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களிடையிலுள்ள வேலையில்லாத் தன்மையினால் அரசாங்க உலர் உணவில் தங்கியிருக்கும் விளைவானது, முன்னுரிமையில் கருதப்படக்கூடிய ஒரு முக்கிய தீர்வுக்குரிய விடயமாக இருக்கிறது. விவசாயத்திலும், மீன் பிடித்தலிலும் ஈடுபட்டிருக்கின்ற சனத்தொகை தவிர்ந்த, எல்லா பிற தொழில் எதிர்பார்த்திருக்கும் தொழிற்படையினரால் பாரம்பரிய தொழில்களில் வேலை வாய்ப்பினைக் காண்பதற்கு முடியவில்லை. அதனால், கீழ்க் கூறப்படும் துறைகளில் வேலைவாய்ப்பினை எடுப்பதற்கு இளைஞர்களைப் பயிற்றுவிப்பது அவசியமாகின்றது.

(அ) மேசன் வேலை (கல் கட்ட்டம்)
(ஆ) ஒட்டுதல்
(இ) வீட்டு மின் கம்பி இணைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) நீர்க்குழாய் திருத்துதல்
(உ) கட்டட சாதனங்கள் அலங்கரிப்பு
(ஊ) மோட்டார் வண்டி /முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல்/ உளவு இயந்திர அமைப்பு
(எ) இயந்திர வேலை (கடைசல் வேலை, கம்பி வளைப்பவர்கள், ஆலையாளர்கள், வெட்டுபவர்கள்)
(ஏ) படகின் வெளியே உள்ள மோட்டார் இயந்திர பழுதுபார்த்தல்
(ஐ) குளிரூட்டி பழுதுபார்த்தல்
(ஒ) தொலைக்காட்சி, வீடியோ ஒலிப்பதிவு இயந்திரம் பழுதுபார்த்தல்
(ஓ) கணனிப் பயிற்சி, இயந்திர உதிரிப் பாகம் / தொழிற்படு நிகழ்ச்சி
(ஔ) மோட்டார் மீள் கம்பி சுற்றுதல்

மேலே உள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பபிற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கும். வன்னிப் பிராந்தியத்தில் கூட்டாக நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தேசிய பயிற்சியர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன் (தேபகைபஅ) கலந்தாலோசனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. தற்போது, இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் வவுனியாவின் உள்ளூர் நிலையங்களுக்கு மாத்திரம் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டுகளில், வன்னிப் பிராந்தியத்தின் கட்டுப்பாடில்லாத பிரதேசங்களையும் உட்சேர்ப்பது அவசியமாகின்றது. கனடாவின் உலக பல்கலைக்கழக சேவைகள் நிலையமும் (WUSE), வவுனியாவின் மனித வள அபிவிருத்திச் சங்கமும் வன்னிப் பிராந்தியத்தின் பிற பகுதிகளிலும் இவ்வகை நடவடிக்கைகளை விரிவு படுத்துவதற்கு கருத்திட்ட ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருக்கின்றன.

4.1.5 நுண் நிதியிடல்

(அ) பல்வேறு தேர்ச்சிகளிலும் வாழ்க்கைத் தொழிலிலும் பயிற்சியளிக்கப்பெற்றிருக்கின்ற இளைஞர்களும், சரீர அங்கவீனர்கள், பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் உட்பட, பயனுள்ள, வருமானத்தை உண்டு பண்ணும் நடவடிக்கைகளில் அவர்களே ஈடுபட முடியும் என்பதற்காகக் நுண் நிதியிடல் வழங்கப்படவிருக்கின்றது. நிதிகள் சுழற்சிக்கடன் அடிப்படையில் வழங்கப்படவிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) விவசாயம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கின்ற குடும்பங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக சுழற்சிக் கடன் அடிப்படையில் நுண் நிதியிடல் வழங்கப்படவிருக்கின்றன.

4.1.6 தகவல், தொலைத் தொடர்பு தொழில் நுட்பம்

அமைச்சானது, (e-Lanka) ஈ-லங்காவினை உண்மையாக்குவதற்காக அரசாங்கத்தினது தகவல் தொலைத்தொடர்பு, தொழில் நுட்ப அபிவிருத்தி வரிப்படத்தில் வற்புறுத்திய பின்வரும் தொலைநோக்குகளை உணர்வதற்கு வன்னிப் பிராந்தியத்தில் நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்தும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- செயற்படுத்தல் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்
- வன்னிப் பிராந்திய தகவல் உட்கட்டமைப்பையும், ஆற்றல் மிகுந்த சூழலையும் கட்டியெழுப்புதல்
- வன்னிப் பிராந்தியத்தில் தகவல், தொலைத் தொடர்பு தொழீல் நுட்ப மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- ஆட்சியையும் விநியோக சேவைகளையும் நவீனப்படுத்தல்: வன்னிப் பிராந்தியத்தில் (E-Governance) ஈ-அரசாட்சி.
- வன்னிப் பிராந்தியத்தில் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக தகவல், தொலைத் தொடர்பு, தொழில் நுட்பத்தை நிலை நிறுத்தல்.

4.1.7 மாவட்ட புனர்வாழ்வளிப்புத் திட்டம்

(அ) மாவட்ட, பிரதேச மட்ட செயற்படுநர்களுடன் கலந்தாலோசனை செய்து வன்னிப் பிராந்தியத்திலுள்ள மாவட்டங்களுக்கு, முழுமையான அபிவிருத்தித் திட்டமொன்றினை தயாரித்தல்;

(ஆ) தகவல், தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்திற்காக சூரிய சக்தி முறைமைகள் மற்றும் மாற்று சக்தி வழிமுறைகள் போன்ற உடனடி விளைவுகள் தரும் கருத்திட்டங்களைத் தயாரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.1.8 விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் உடனடிக் குறிக்கோளுடன், சாத்திய ஆய்வும், பிற ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

(அ) உப்பை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்

(ஆ) பனை மரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்

(இ) மீனை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்

(ஈ) விவசாய / பண்ணை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்

4.1.9 நீர்ப்பாசனம்

கைவிடப்பட்ட நீர் வளங்களை மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்கள் அவர்களது பண்ணை/ விவசாய நடவடிக்கைகளுக்காகப் பாவிக்க முடியும் என்பதற்காக அவற்றைப் புனரமைப்பதற்கு / திருத்துவதற்கு/ படிகை மணலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

4.1.10 உட்கட்டமைப்புக்களை மீளக் கட்டுதல்

பிராந்தியத்தில், சேதமாக்கப்பட்ட் உட்கட்டமைப்பினை மீள் செயற்படுத்துவதற்கும், வேலை வாய்ப்பினை உருவாக்கும் நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கும் வரும் ஆண்டுகளில் அதிக கவனம் செலுத்தப்படவிருக்கிறது. இன முரண்பாட்டின் காரணமாக மோசமான முறையில் சேதமாக்கப்பட்ட அத்தகைய உட்கட்டமைப்புக்கள், மீள் குடியேற்ற நோக்கத்திற்காக, அமைச்சில் கிடைக்கக்கூடிய நிதிக் கூறுகளுள் இருந்தும் வெளிக்கள மூலவளத் திணைக்களத்தினூடாகப் பெறக்கூடிய நிதி உதவிகளுடனும் மீள் கட்டப்படும்.

4.1.11 கண்ணி வெடிகளை அகற்றுதல்

*கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளானது;*

ஐக்கிய நாட்டு அபிவிருத்தித்திட்டத்தின் ஒரு குடையின் கீழ் அமைக்கப்பெற்ற கருத்திட்டத்தினால் கூட்டாக கூட்டிணைப்புச் செய்யப்படுகின்றன. கட்டுப்பால்லாத பிரதேசங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதாபிமான முறையில் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிவெடிகளை அகற்றும் பிரிவானது அவர்களாகவே நோர்வே நாட்டு உதவியுடன் இவ்வகை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இருந்த போதிலும், வன்னியின் கட்டுப்பாடுள்ள பிரதேசங்களில் உண்மையான கண்ணி வெடிகளை அகற்றுதல் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இது அனேகமாக, ஐக்கிய நாட்டு அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் 2003இல் கிடைக்கின்ற அதிக உதவியுடன் நடைபெறும்.

அரசாங்க அதிபர்கள் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்காகக் கிராமங்களை அடையாளங் கண்டிருக்கிறார்கள். அவைகள் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| முல்லைத்தீவு | - | ஒட்டுசுட்டான் பிரதேசம் | - 12 | கிராமங்கள் |
| | - | கரைதுறைப் பற்று பிரதேசம் | -08 | கிராமங்கள் |
| | - | மாந்தை கிழக்குப் பிரதேசம் | -03 | கிராமங்கள் |
| வவுனியா | - | வவுனியா வடக்கு | -17 | கிராமங்கள் |
| | - | வவுனியா | -16 | கிராமங்கள் |
| மன்னார் | - | மன்னார் | -06 | கிராமங்கள் |
| | - | முசலி | -02 | கிராமங்கள் |
| | - | நானாட்டான் | -02 | கிராமங்கள் |
| | - | மடு | -03 | கிராமங்கள் |
| | - | மாந்தை மேற்கு | -07 | கிராமங்கள் |

அமைச்சானது,. கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்காகாவும், உண்மையாக கண்ணி வெடிகளை அகற்றுவதைத் துரிதப்படுத்துவதற்காகவும் வசதிகளை மேம்படுத்துவதற்கு மனிதாபிமான முகவர்களது இணையத்துடன் அதனது கருத்திட்டங்களைத் தொடர்வதற்கு எதிர்பார்க்கின்றது.

## 4.2 கருத்திட்ட நிதிப்படுத்தல்

அரசாங்க சர்வதேச உதவி முகவராண்மைகள் மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் ஆகியவற்றினால் மீள் குடியேற்றக் கருத்திட்டம் இணைந்து நிதிப்படுத்தப்படும் NECORD[1] மற்றும் NEIAP[2] மற்றும் ERP[3] போன்ற வெளிநாட்டு நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களின் கீழும் நிதியங்கள் கிடைக்கும். தனியார் துறை பங்களிப்பு, விசேடமாக உள்ளீடு விநியோகங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் வரவேற்கப்படுகின்றது.

1. NECORD- வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. NEIAP - வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம்

3. ERP - அவசர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

4.3 கருத்திட்ட விவரணம்

1. ஆதாய உடமையாளர்களுக்கு விழிப்பியல் திட்டம்

2. கண்ணி வெடிகளை அகற்றுதல் - கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புகளுக்கு, விசேடமாக கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில் செயற்படுத்தலை துரிதப்படுத்துவதற்கு வசதிகளை மேம்படுத்தல்.

3. இடைத்தங்கல் முகாம்கள் - மீள் குடியேற்றததிற்காக ஆயத்தம் செய்யும் மீள் குடியேற்றக்காரர்களுக்கும் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் உதவி செய்தல்.

4. வீதிகள் - கிராமிய வீதிகள் உட்பட வீதிகளது புனரமைப்பும் நிர்மாணமும்.

5. நீர் - ஆழ் கிணறுகள் உட்பட பாதுகாப்பான குடிநீர்

6. சக்தியின் புதுப்பிக்கத்தக்க மூலவளங்கள் - தேசிய மின் உற்பத்தியுடன் இணைக்கப்படாத பிரதேசங்களுக்கான சூரிய ஒளி, நன்நீர் மின் மற்றும் காற்றுச்சக்தி.

7. கல்வி – வன்னிப்பிரதேசத்திற்கு வெளியே வாழுகின்ற உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் உட்பட மன அதிர்ச்சிக்குட்பட்ட குழுக்களையும் இலக்காகக் கொள்ளல்.

8. வீடமைப்பு – முதற்படியில் தற்காலிகமாகவும், அதனைத் தொடர்ந்து வெளிவாரி நிதி மூலங்களினால் நிரந்தர வீடமைப்பு

9. 6 மாத நிவாரணமும் நிவாரண மனப்பான்மையிலிருந்து மீளுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பொருளாதாரச் சொத்தைக் கட்டியெழுப்புதல்

- i. கமத்தொழில் - விதை, விவசாய செய் கருவிகள், வலு
- ii. மீன்பிடி - படகுகள், வலைகள், இயந்திரங்கள்
- iii. போக்குவரத்து - ட்ரக்டர்கள், லொறிகள், பஸ்வண்டிகள்
- iv. நிதி – வங்கியும் பிற நிதிப்படுத்தல் நிறுவனங்களும்

11. தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்தல் (e-learning) ஈ-கற்கை உட்பட

12. பெயரந்த (பாரிய) பிரச்சனைகள்

- i. சுகாதாரம்
- ii. கல்வி
- iii. தொழின் முயற்சி அபிவிருத்தி
- iv. கலாசார அபிவிருத்தி
- v. சந்தைகளையும், சந்தைத் தொடர்புகளையும் உருவாக்குதல்
- vi. தொலைத் தொடர்புகள்
- vii. மின்சாரம்
- viii. பிரதான வீதிகள்
- ix. தகவல், தொலைத் தொடர்புத் தொழில் நுட்பம்
- x. கரிசனை உள்ள அரசாங்கச் சேவை
- xi. சட்டமும், ஒழுங்கும்

13. விசேட கருத்திட்டங்கள்

- i. மழைநீர் அறுவடை
- ii. முந்திரி உற்பத்தி, ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தல்
- iii. கமக் கிணறுகள்
- iv. மத்திய களஞ்சியம்
- v. பயிர் பன்னிமைப்படுத்தல்
- vi. கால்நடை அபிவிருத்தி
- vii. நன்னீர் மீன்பிடித்தல்
- viii. சமுதாய வனவளம்
- ix. சேதன கமப்பண்ணைத் தொழில்
- x. ஏற்றுமதிக் கிராமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. வன்னி அபிவிருத்திக்கான ஆய்வுகள்

15. குள அபிவிருத்தி

16. கடல் ஏரி அபிவிருத்தி

17. பனைவள அபிவிருத்தி

18. ஏற்று நீர்ப்பாசனத்தை மேம்படுத்தல்

19. உப்பு அடிப்படையிலான கைத்தொழில்கள்

20. மீன்பிடிப் படகுகளைக் கட்டுதல்

21. மத்திய, மாகாண, மாவட்ட, பிரதேச நிறுவனங்களால் வழங்கப்படும் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான சம வாய்ப்பு.

## 4.4 உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் தேசிய அளவீடு

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் நம்பகத்தன்மையான புள்ளி விபரங்களின் முக்கியத்தவத்தை ஏற்றுக் கொண்டு ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகர் (UNHCR[1]) மற்றும் சனத்தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் இடம் பெயர்ந்த மக்களின் தேசிய அளவீடு ஒன்றை புனர்வாழ்வு, மீள் குடியேற்ற, அகதிகள் விவகாரங்கள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

எப்படி இருந்த போதிலும், அந்த அளவீட்டின் முடிவுகள் மீள் குடியேற்றம் செய்யும் திட்டமிடலாளர்களுக்கு இதுவரை கிடைக்கச் செய்யப்படவில்லை.

இந்த அளவீட்டின் இறுதி முடிவுகளை வெளியிடுவது தாமதப்படுவதனால், சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களினால் வழங்கப்பெற்ற புள்ளிவிபரங்களையே அமைச்சானது உபயோகிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.5 அமுலாக்கல் முகவராண்மைகளின் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல்

மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களின் செயற்படுத்தலைத் துரிதமாக்குவதற்காக, அவசரக் கவனத்தை அவசியப்படுத்தும் பிரச்சினைகளாக விசேடமாக மன்னாரிலும், முல்லைத்தீவிலும் அரசாங்க நிறுவனங்களினதும், கிராம மட்ட நிறுவனங்களினதும் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் உள்ளடங்குகின்றன. விசேடமாக, கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில், இது ஒரு பிரதான தடையாக இருப்பதனை அமைச்சானது அடையாளம் காண்கிறது.

4.6 அமுலாக்கல் முறைமையியல்

கட்டுப்பாட்டின் கீழ் நிறுவனங்கள் எதுவும் நேரடியாகக் குறித்தொதுக்கப்படாததினால், மாவட்டத்தில் நடை முறையிலுள்ள செயற்படுத்துதல் முகவராண்மைகளைப் பயன்படுத்துவதற்கு வன்னி புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சு உத்தேசித்துள்ளது. மேலும், கருத்திட்டங்களின் வகுத்தமைத்தலுக்கும், செயற்படுத்தலுக்கும் அரச சார்பற்ற தாபனங்களினதும், தனியார் துறையினதும் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

4.7 வறுமைத் தணிப்பு செயலுபாயங்களை ஒன்றிணைத்தல்

மீள் குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களுக்கான நிவாரணம் ஆரம்பத்தில் அத்தியாவசிய சேவைகள் பிரிவினால் வழங்கப்பட்டு, பின்னர், சமுர்த்தி அமைச்சு அதன் செயற்படுத்தலை வன்னி மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கும் போது சமுர்த்தித் திட்டத்துடன் ஒன்றிணைக்கப்படும். உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் வேலைக்கான உணவு உதவியானது மீள் குடியேற்றப்பட்ட இடமாற்றப்பட்ட கிராமங்களில் உட்கட்டமைப்பு மேம்படுத்தலுக்காகச் செயற்படுத்தப்பட்டு இருக்கிறது.

5. மீள் குடியேற்றத்திற்கான செயல் உபாயங்கள்

5.1 வறுமைக் குறைப்புச் செயல் உபாயமும் மூன்று "R" நிகழ்ச்சித்திட்டமும்

நன்கொடையளிப்பவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை, புத்தி ஜீவிகள் உட்பட்ட பல்வேறு வகையான ஆதாய உடமையாளர்களுடன் கலந்தாலோசித்து அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட வறுமைக் குறைப்பு செயல் உபாயமானது, இலங்கையில் நிலவும் வறுமையின் பரப்பு, காரணங்கள் மற்றும் விளைவுகளினது மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று "R" நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்கத்தினது பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடத்தும் வறுமைக் குறைப்பு செயல் உபாயத்திற்கு அமைவாகவே தொடர்புடையதாய் இருக்கிறது. மூன்று "R" நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்த குறிக்கோளானது இலங்கையர்களது ஆற்றலை வலுவூட்டுவதற்கு உதவுவதாய் இருக்கும்.

- ❖ முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தலை உறுதிப்படுத்தல் (நிவாரணம்).
- ❖ பலன் தரக்கூடிய வாழ்க்கைத் தேவையான தொழின் முயற்சிகளைக் கட்டியெழுப்புதல் (புனர் வாழ்வளிப்பு)
- ❖ இனங்களுக்கிடையிலான மீள் இணக்கத்திற்கு உதவுதல் (மீள் இணக்கம்)

அமைச்சினது வேலைத்திட்டமானது, அரசாங்கத்தினது வறுமைக் குறைப்பு செயல் உபாயம் மற்றும் மூன்று "R" நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை வழிகாட்டல்களைக் கவனத்தில் கொண்டு வகுத்தமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலைத்திட்டத்தின் செயற்படுத்தலானது வன்னி மக்களது கஷ்டங்களை இல்லாதொழிக்கும். வன்னிப் புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சுக்கு உரிய, ஏனையவைகளுடன் சேர்ந்தவாறான விதந்துரைகள் பின்வருமாறு அமையும்:

(1) உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுவதில், உத்தியோக கொள்கையாக சர்வதேச இடம் பெயர்வு மீதான வழிகாட்டற் கொள்கைகளைப் பின்பற்றுதல்.

(2) மேம்பாட்டிற்காக, குறித்த கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளங்காண்பதற்கு, வழிகாட்டற் கொள்கைகளை உபயோகித்து உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் பரந்த ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளல்.

(3) மீளக் குடியமர்த்தலுக்கும் மீள இடமளித்தலுக்கும், பரந்த, திறமையுள்ள அணுகுமுறையினை உறுதிப்படுத்துவதற்கு இடம் பெயர்ந்தவர்களுக்காக தேசிய நிலையான தீர்வுக் கொள்கை ஒன்றினை விருத்தி செய்தல்.

(4) வழி காட்டற் கொள்கைகளுக்கு இசைந்தவாறு மூன்று "R" திட்ட வரம்பின் கீழ் செய்யப்பட்ட செயல்களின் மீது, முரண்பாட்டுப் பிரதேசங்களில், பொதுமக்களுடன் தொடர்ச்சியான கலந்தாலோசனைகளை ஆரம்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) செயல் முறை, பழக்கங்களது பிரயோக சீரான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு மூன்று "R" திட்ட வரம்புடன் தொடர்புடைய கொள்கைகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் இற்றைவரைப்படுத்தல்.

(6) வடக்கு, கிழக்கின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள், சாத்தியமான முழு அளவுக்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதேசங்களாகக் கருதுதல்.

(7) நலன்புரி நிலையங்களில் வாழுபவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மீள் குடியேற்றச் செயற்பாடுகளை விரைவுறுத்துவதற்குத் தொடர்ச்சியான கணிப்பீட்டினை மேற்கொள்ளல்.

(8) வறுமைக் குறைப்பு செயல் உபாயங்களுடன் இடம் பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்த்தலை ஒருங்கிணைத்தல்.

(9) இடம் பெயர்ந்தவர்களது ஒருங்கிணைப்பு, மீள் இடமளிக்கப்பட்ட சமூகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியையும், உருவாக்கப்பட்ட சமூக, பொருளாதார, சூழல் மதிப்பீட்டையும் தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணித்தல்.

(10) அபிவிருத்தி பலாபலன்களைப் பாதுகாத்தல், உள்ளூர் யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு அபிவிருத்தித் திட்டங்களை திசைப்படுத்தலும், மீள் இணக்கத்தினை மேம்படுத்தலும்.

(11) நிலைமைகள் சீராவதனால், பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, தகவு திறன்களை நிறுவுதல்.

(12) சேதமாக்கப்பட்ட சமூக உட்கட்டமைப்புக்களைத் திருத்துவதற்கு உடனடித் தாக்க முகக் குறிப்புக்களை மேம்படுத்துவதுடன், வருமானத்தை உண்டு பண்ணும் கருத்திட்டங்கள் மற்றும் கடன் திட்டங்களின் ஊடாக, வாழ்க்கைத் தேவைகளை மீள் கட்டியெழுப்புதல்.

(13) முரண்பாட்டுக் கட்சிகளினால் வரையப்பட்ட எல்லைக் கோட்டைத் தாண்டிச் சென்று சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2 உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கிடையில் சமூக வலுவூட்டல்

இன முரண்பாடு காரணமாக மக்களது பெருந்தொகையான உள் நாட்டு இடம் பெயர்வானது, வன்னிப் பிராந்தியத்தில் மக்களது சமூக அமைப்பு மற்றும் குடும்ப வாழ்க்கையில் பாரிய சேதத்தினை ஏற்படுத்தியது. அவர்களது பொருளாதார விடுதலையின் வழியிலே பல்வேறு உடைவுகளும், பிரிவுகளும் எழுந்திருக்கிறது. எனவே, அமைச்சானது, அவர்களது வாழ்க்கை நிலையில் இயல்பு நிலையை மீள் நிலைப்படுத்துவதற்கும் உசிதமான வாழ்க்கைத்தரத்தினை யதார்த்தமாக்குவதற்கும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களது சமூக வலுவூட்டலினை விரைவுறுத்துவதற்கும் வேலைத்திட்டமொன்றினைத் தயாரித்து இருக்கிறது. அமைச்சானது, கலந்துரையாடல் நடவடிக்கைகளின் மூலம் அமைப்புக்களுக்கு மீள் குடியேற்றக் கிராமங்களைக் குறித்தொதுக்குவதனால் அரச சார்பற்ற நிறுவனங்களது ஆதரவினை எதிர் பார்க்கிறது. சமூக வலுவூட்டலானது, பிராந்தியத்திலுள்ள நலன்புரி நிலையங்களிலும், புத்தளம் போன்ற பிற பிரதேசங்களிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

## 5.3 ஒருங்கிணைக்கப்பட்ட மீள் குடியேற்றக் கிராமங்கள்

உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் ஒதுக்கப்பட்டவர்களையும், பலவீனமானவர்களையும் உள்ளடக்கிய மக்கள் குழுவைச் சேர்ந்தவர்கள். எனவே, அவர்களை, சுய அடிப்படையில் அவர்களது சொந்தக் கிராமங்களில் மீள் குடியேற்றுவது எங்களது கட்டாயக் கடமையாக இருக்கிறது. மீள் குடியேற்ற நடவடிக்கையானது, சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு உருவாக்குதல், சமூக வலுவூட்டல், உற்பத்தி அதிகரிப்பும் சேமிப்பு அதிகரிப்பு மற்றும் கடன்கள் மூலம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதை உறுதி செய்தல் வேண்டும்.

மேற்கூறிய அம்சங்களை உள்ளடக்கிய கிராம புனர்வாழ்வளிப்புத்திட்டமானது, உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்தக் கிராமங்களில் ஒருங்கிணைப்பும், தேவையான சமூக, பொருளாதார வசதிகளை வழங்கி மீள் குடியேற்றுவதற்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது அவர்களது பூர்வீக மண்ணில் அவர்களை வலுவூட்டல் செய்யும். ஒருங்கிணைந்த கிராம புனர்வாழ்வளிப்புத் திட்டத்தினை கீழ் நிலை, மேல் அணுகுமுறையைப் பின்பற்றி செயற்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனமானது வரைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.4 துறைசார் செயல் உபாயம்

உடனடித் தேவையானது நிவாரணம், புனர்வாழ்வளிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் துரித பெறுபேறுகளை அடையும் நோக்குடன், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துவதாக இருக்கிறது. கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் போது, அதிகமாகப் பாதிக்கப்பட்ட கிராமங்கள்/ பிரதேசங்கள் / ஆட்கள் / சமூகங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

*வறுமைக் குறைப்பு செயல் உபாய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான துறைசார் செயல் உபாயம் பின்வருமாறு அமையும் :*

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தல் - சமாதானம் என்பதே முக்கிய திறவுகோல்

- இன முரண்பாட்டினால் துன்புற்றவர்களுக்காக அதிக செயல் வலுவுள்ள நிவாரணம் - மீள் குடியேற்றம், விரைவான சந்தர்ப்பத்தில் உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு மீள் இடமளித்தல்.
- புனர் வாழ்வளிப்புக்கு ஆதரவளித்தல் - உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்காக வருமானத்தை உண்டுபண்ணும் சந்தர்ப்பங்களை மேம்படுத்தல்.
- சமூக இணக்கப்பாட்டில் முதலிடுதல் - சிறுபான்மைச் சமூகத்தினரின் குறைபாடுகளுக்குத் தீர்வு காணல்.

6. மீள் குடியேற்றத்தில் எதிர் நோக்கிய பிரதான தீர்வுக்குரிய விடயங்கள்

6.1 மீள் குடியேற்றத்துக்கான காணி கிடைத்தலைப் பாதிக்கும் காரணிகள்

(1) உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களினால் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணிகள் - உச்ச பாதுகாப்பு வலையத்திற்குள் அவர்களது காணி வருவது அல்லது கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கை முற்றுப் பெறாத நிலை காரணமாக இந்நிலை ஏற்பட்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கண்ணிவெடிகளை அகற்றுதலில் மெதுவான வளர்ச்சி - விசேடமாக மன்னார், வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் சமூக வலுவூட்டலுக்காகவும், தேவை மதிப்பீட்டிற்காகவும் இந்தக் கிராமங்களை எடுப்பதில் தாமதம்.

(3) வயல் நிலங்களில் பாதுகாப்பு அரண்களை அகற்றுதல் - பயிர்ச் செய்கையின் கீழ் அதிகமான காணிகளைக் கொண்டு வருவதற்கு இது ஒரு அத்தியாவசியமான விடயமென்று மீள் குடியேறும் குடும்பங்களால் கருதப்படுகிறது.

(4) மீள் இடமளித்தற் கொள்கை - வவுனியா, நலன்புரி நிலையங்களிலுள்ள காணியற்ற குடும்பங்களது வேண்டுகோளானது, நடைமுறையிலுள்ள காணிப் பராதீனப் படுத்தற்கொள்கையின் காரணமாக நிறைவேற்றப் படவில்லை. இப்போதுள்ள கொள்கையின்படி பிற மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள், மீள இடமளிக்க காணி ஒதுக்கப்படுவதில் கட்டுப்பாடு உண்டு.

6.2 இணைக்கும் காரணிகள் - போக்குவரத்து, தொலைத் தொடர்பு வகையறாக்கள்:

வீதிகள் :

இணைக்கும் வீதிகளில் அதிகமானவை மோசமான நிலைமையில் இருப்பது, நாட்டின் ஏனைய பகுதிகளுடன் செயல் வலுமிக்க போக்குவரத்துச் சேவைகளைத் தவிர்க்கிறது. இது, புத்தளம் - மன்னார் வீதியையும் மாங்குளம் - முல்லைத்தீவு வீதியையும் அவசர அடிப்படையில் கவனிக்க வேண்டியதனை உள்ளடக்குகிறது.

தொலைத் தொடர்பு :

நடவடிக்கைகளது கூட்டிணைப்பிற்காக ஆகக் குறைந்த வசதிகளாவது, விசேடமாக கட்டுப்பாடில்லா பிரதேசங்களில், தேவையாக இருக்கிறது. இந்த ஆரம்பப்படிநிலை தனியார் துறையினரால் பின்பற்றப்பட்டு, மேலும் அபிவிருத்தி செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரதப் பாதை :

மன்னாரிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான புகையிரதப் பாதையின் விரிவாக்கமானது, வன்னிப் பிராந்தியத்தில் தனியார் துறை அபிவிருத்திக்கு ஒரு முதற் தேவையாக இருக்கிறது. இது, பிரதான நிலத்துடன் மன்னார்த் தீவினைத் தொடர்பு படுத்தும் தாம்போதியினையும், பாலத்தையும் உள்ளடக்கும்.

இந்தியாவிற்கான படகுச்சேவை :

அகதிகள் திரும்புவதனையும், தெற்கு இந்தியாவுடன் வியாபார நடவடிக்கைகளை அதிகரிப்பதையும் எளிதாக்கல்.

ஆற்றலைக் கட்டியெழுப்புதல் :

இது, மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்களது துரித செயற்படுத்தலுக்கான ஒரு பிரதான தடையாக அடையாளங்காணப்பட்டிருக்கிறது. அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்களது துறைகள் இரண்டிலும் உள்ள பலவீனமான ஆற்றல், விசேடமாக கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில், குறைந்த நிதி உதவி உள்வாங்கலை விளைவிக்கிறது.

6.3 மீள் குடியேற்றக் கருத்திட்டங்கள் மீது அரச சார்பற்ற நிறுவனங்களையும், தனியார் துறையினரையும் ஈடுபடுத்துவதற்கான நியமச் செயல் முறை :

செயல்வலு, செயற்திறன்மிக்க மீள் குடியேற்றக் கருத்திட்டங்களது செயற்படுத்தலுக்காக, தற்போதுள்ள செயல்முறைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், தனியார் துறைப்பங்குபற்றுநர்களுக்கும் நிதியினை அனுப்புவதற்கு மீளாய்வு செய்யப்படும்.

6.4 மின்சாரம் :

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள அதிகமான மீள் குடியேற்றக் கிராமங்கள் தேசிய மின் உற்பத்தித் தொகுதியுடன் அல்லது காணப்படும் மாற்றுச் சக்தி வளத்துடன் இணைக்கப்படுவது அவசியமாகும். வேலைவாய்ப்பு உருவாக்கல் சாத்தியப்பாட்டின், வெற்றியானது பிரதானமாக இந்த உட்கட்டமைப்புக்களது அபிவிருத்தியில் தங்கியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.5 நிரந்தர வீட்டிற்கான நிதிகள் :

மீள் வருகின்ற குடும்பங்களுக்கான நிரந்தர வீட்டிற்கான நிதியிடலானது 2003ஆம் ஆண்டிலிருந்து, தற்காலிக குடிசைகள் இரண்டு வருடங்களுக்கு மட்டுமே நிலைக்குமென்பதால், தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது.

6.6 புனரமைப்பு அபிவிருத்திக்கான வங்கி :

புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதில் வர்த்தக வங்கிகளுடன் (Commercial Banks) பெறப்பட்ட அனுபவங்கள், விசேடமாக பொருளாதார, நடவடிக்கைகளது நிதியிடல் துறையில், ஏமாற்றமளிப்பதாய் அமைகிறது. எனவே, பிராந்தியத்தின் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான விசேட வங்கியொன்றை நிறுவுவதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

7. வளர்ச்சி மீளாய்வு - 2002

7.1 நூறு நாள் நிகழ்ச்சித்திட்டம்

முன்னேற்றத்தின் வேகமான பாதையில் நாட்டை இட்டுச் செல்வதற்கான நூறு நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாட்டின் சாராம்சம் கீழே வழங்கப்பட்டுள்ளது.

7.1.1 ஹஜ் பெருநாளைக் கொண்டாடுதல்

மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் ஹஜ் பண்டிகை கொண்டாடப்பட்டது. முஸ்லிம், தமிழ் சமுதாயங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மக்கள் கலாச்சார விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தனர். இதன் மூலம் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அடிக்கல்லை நாட்டியுள்ளார்கள். இந்நிகழ்ச்சியுடன் தொடர்புபட்ட வகையில் புத்தளம், பாணந்துறை ஆகிய பகுதிகளில் தற்பொழுது வாழும் 500 உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களை எதிர்காலத்திகதியொன்றில் மீள்குடியேற்றுமுகமாக தமது மூலவதிவிட இடங்களுக்கு வருகை தந்து பார்வையிட்டுச் செல்வதற்கு அமைச்சு சந்தர்ப்பமொன்றை வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.1.2 மன்னாரில் இடம்பெயர்ந்த, மீள்குடியேற்றப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குதல்

மீன்பிடித்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக சுழற்சிக்கடன் நிதியத்தினை உருவாக்குவதற்காக நாற்பதினாயிரம் ரூபா கொண்ட ஆரம்ப உதவுதொகையொன்று பயன்படுத்தப்பட்டது. இந்நிதியம் மன்னார் மாவட்டத்திலுள்ள மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களால் நிர்வகிக்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் பின்வரும் கிராமங்களைச் சேர்ந்த 92 மீனவக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

| இல | கிராமம் | மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக் கொண்ட குடும்பங்கள் |
|---|---|---|
| 1. | விடத்தல்தீவு | 20 |
| 2. | எருக்கலம்பிட்டி | 26 |
| 3. | காட்டாஸ்பத்திரி | 15 |
| 4. | புதுக்குடியிருப்பு | 16 |
| 5. | நடுக்குடா | 15 |

7.1.3 வீதி அபிவிருத்தி

நூறு நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் மூன்று வீதிகளை புனரமைக்க ரூபா 860,000.00 செலவழிக்கப்பட்டுள்ளது.

(1) நானாட்டானுக்கும், மடுக்கரைக்குமிடையிலான தாம்போதியும், வீதியும்.

(2) மன்னார் மாவட்டத்திலுள்ள எருக்கலம்பிட்டியில் ஆமைப்படுக்கை வீதியின் திருத்தமும், அபிவிருத்தியும்.

(3) புத்தளம் மாவட்டத்தில் ஆலங்குடாவையும், மசூர் நகரையும் தொடர்புபடுத்தும் வீதியைக் கிறவலிட்டு அமைத்தல்.

7.1.4 நெல் சந்தைப்படுத்தல்

விவசாயிகளின் நன்மை கருதி, முருங்கனில் நெல் கொள்வனவு நிலையம் திறந்து வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலமாக நெல் கொள்வனவில் போட்டி நிலை ஏற்பட்டு விவசாயிகள் நன்மையடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.1.5 அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்தல்

புத்தளத்தில் தற்சமயம் வாழ்ந்து வரும் வடபகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்த குடும்பங்களுக்குச் சேவையாற்றும் நோக்கில் அநுராதபுர வீதியில் அமைச்சின் சுற்றுலா அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அமைச்சின் அலுவலர்கள் இச் சுற்றுலா அலுவலகத்திற்கு கிரமமாக வருகைதந்து இடம் பெயர்ந்த குடும்பங்களின் குறை நிவர்த்தி சேவையினைச் செய்வதன் மூலம், கொழும்பிற்குப் பிரயாணம் செய்வதற்கு ஏற்படும் அநாவசிய செலவுகள் தவிர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

7.1.6 பாடசாலைகளுக்கான தளபாட விநியோகம்

புத்தளம் மாவட்டத்திலுள்ள 10 பாடசாலைகளுக்கு தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டன. இதனூடாக 1050 இடம் பெயர்ந்த மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர்.

7.1.7 இடம் பெயர்ந்தவர்களுக்கான கிராமிய மின் திட்டங்கள்

புத்தளம் மாவட்டத்திலுள்ள ரசூல் நகர் எனும் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் கிராமம் 2 கிலோ மீட்டர் நீளமான விஸ்தரிப்பின் மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டது. இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைப் பழுவினைக்குறைக்கும் வகையில் இடத்திட்டம் அமைந்தது.

